செ.வெ.எண்: 48 நாள்: 22.09.2016

## பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலகத்தில் சமூக பணியாளர் ஒரு காலி பணியிடம் முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.14,000/-(ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) வீதம் தொகுப்பூதியத்தில் பணியாற்றிட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**கல்வி தகுதி:** பட்டதாரி, முதுநிலை பட்டதாரி(10+12+3 மாதிரி) உளவியல், சமூகப்பணி(MSW), சமூகவியல்களில் வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்தலில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தைகள் சார்ந்த பணியில் இரண்டு வருடம் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது(பொது விண்ணப்பதாரர்களுக்கு) பெண் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் www.pudukkottai.tn.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை அனைத்து சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து 07.10.2016 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். 07.10.2016-க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
எண்:2, லெட்சுமி எஸ்டேட், இராஜகோபாலபுரம் அஞ்சல், புதுக்கோட்டை-622 003
தொலைபேசி எண்:04322-261 266.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**